# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 35 / 2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 2 |
| Name | : கருப்பையா. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.11.2023.

- - - - - - -

2,3,4 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 5 எதிரிகள் ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் பேரையம்பட்டியில் குடியிருந்துவருகிறேன். வழக்கின் எதிரிகளைத் தெரியும். அ.சா.1 என் மனைவி. 07.12.2014 ஆம் தேதி காலை 11 மணிக்கு உத்தப்புரத்தில் என் இடத்தில் ராஜாமணி, காசிராஜன், சின்னக்கருப்பு, தொப்புளான் என்ற கருப்பையா, கோமாளி என்ற சுப்பையன், வெருகன் என்ற முனியாண்டி ஆகியோர்கள் கொட்டம்போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது நானும், என் அண்ணன் பாண்டியும் எங்கள் இடத்தில் ஏன் தேவையில்லாமல் கொட்டம்

போடுகிறீர்கள் என்று கேட்டேன். அப்போது அவர்கள் என்னை கீழே தள்ளிவிட்டார்கள். காசிராஜன், ராஜாமணி ஆகியோர்கள் என்னை அரிவாளால் இடது கையை சேர்ந்து வெட்டினார்கள். சின்னக்கருப்பு அரிவாளால் என் வலது பக்க நெற்றியில் வெட்டிக் காயத்தினை ஏற்படுத்தினார். கோமாளி என்ற சுப்பையன், வெருகன் என்ற முனியாண்டி, தொப்புளன் என்ற கருப்பையா அரிவாளால் என்னை வலது கையில் வெட்டிக் காயத்தினை ஏற்படுத்தினார்கள். அந்த சமயத்தில் என் அண்ணனை ஆஜர் எதிரிகள் வெட்டிக் காயத்தினை ஏற்படுத்தினார்கள். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 அரிவாளால்தான் காசிராஜன், ராஜாமணி வெட்டப் பயன்படுத்தியது. என்னிடம் காட்டப்படும் இரும்புப் பிடி போட்ட சிறிய அரிவாளால் சின்னக்கருப்பு, சுப்பையா, முனியாண்டி, கருப்பையா ஆகியோர்கள் என்னை வெட்டடப் பயன்படுத்தியது அது சா.பொ.3 ஆகும். என்னிடம் காட்டப்படும் வெள்ளை வேட்டி என் அண்ணன் பாண்டிக்குரியது சா.பொ.4 ஆகும். என்னிடம் காட்டப்படும் வெள்ளை சட்டை என் அண்ணன் பாண்டிக்குரியது சா.பொ.5 ஆகும். என்னிடம் காட்டப்படும் பனியன் சா.பொ.2 என்னுடையதுதான். பின்னர் நான் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டேன். 3 நாட்கள் கழித்து நான் மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை -</u>

1 வது எதிரி முனியாண்டி என் அப்பா என்றால் சரிதான். என் தந்தை முனியாண்டிக்கு 2 தாரங்கள். 1 வது கிருஷ்ணம்மாள், 2 வது சுப்புலெட்மி என்றால் சரிதான். நான் சம்பவ நேரத்தில் கோட்டைப் பட்டியில் குடியிருந்தேன். எதிரிகள் கொட்டம் போடுவது கேள்விப்பட்டு நான் அங்கு

சென்றேன் என்றால் சரிதான். நானும் என் அண்ணன் பாண்டியும் போனோம் என்றால் சரிதான். அந்த சொத்து பூர்வீகச் சொத்து என்றால் சரிதான். 2 தாரத்திற்கும் பாகம் பிரிக்காமல் பொதுவாக இருந்தது என்றால் சரிதான். சொத்தில் ஒரு பகுதியை 23.02.2011 ஆம் தேதி என் தாயார் கிருஷ்ணம்மாளுக்கு தானம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். தானம் எழுதிக்கொடுத்தது சம்பந்தமாக என் தந்தை முனியாண்டியையோ, என் தம்பி காசி என்ற காசிராஜனிடம் கேட்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக இருந்த இடத்தில் கொட்டம் போட்டார்கள் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் என் மனைவி இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்னர்தான் என் மனைவி கேள்விப்பட்டுத்தான் வந்தார் என்றால் சரிதான். சம்பவத்தின்போது, நானும் என் அண்ணனும் போய் காசிராஜனிடமும், முனியாண்டியிடம் சொத்து வேண்டும் என்று பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தமாக தாவா பண்ணவில்லை என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் தந்தை முனியாண்டியும், என் தம்பி காசிராஜனும் கொட்டம் போட்டுக்கொண்டிருந்ததாகவும், நான் அரிவாளுடன் போய் தாவா செய்தோம் என்றால் சரியல்ல. அப்போது எங்களுக்குள் ஏற்பட்ட சண்டையில் என் பாண்டியின் கையிலிருந்த அரிவாளால் என் கையில் பட்டு துண்டானது என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கும்போது, நான், என் அண்ணன் பாண்டி, முனியாண்டி மற்றும் காசிராஜன் ஆகியோர்கள் இருந்தோம் என்றால் 6 பேரும்தான் இருந்தார்கள். மேற்படி காசிராஜனை நான் தாக்கியதாக ஒரு வழக்கு உண்டு என்றால் அது பொய் வழக்காகும். மேற்படி வழக்கு குற்ற எண். 210 / 2016, இதச பிரிவுகள் 294 பி, 324 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது

என்றால் சரிதான். சம்பவம் காலை 11 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான். அதேநேரத்தில் காசிராஜனை தாக்கியதாக எங்கள் மீதும் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்தான் அரிவாளுடன் போய் காசிராஜன் மற்றும் முனியாண்டி மீதும் தாக்குதல் நடத்தினேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் எதிரிகளைத் தாக்கும்போது அரிவாள் தவறுதலாக பட்டு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

ஒப்பம் / திரு. P.S. ரஸ்கின் ராஜ், 30.11.23.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.